பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 11 2024 **MONDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திள்

- ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக நாளை மறுநாள் தேர்தல் நடைபெறவுள்ள 43 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

- சத்திஷ்கர், ஒடிசா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் 726 கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- மணிப்பூரில் மத்திய ரிசர்வ் காவல்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 11 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

- ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில், இந்தியா 4-0 கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.

>>>><<<<

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக நாளை மறுநாள் தேர்தல் நடைபெறவுள்ள 43 தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

இந்த முதல்கட்ட தேர்தலில் 683 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஒரு கோடியே 37 லட்சம் வாக்காளர்கள், தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றவுள்ளனர்.

வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் அலுவலர்களை அனுப்பும் பணி தொடங்கியுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ரவிக்குமார் கூறியுள்ளார்.

முதல்கட்ட தேர்தல் வாக்குப்பதிவிற்காக 15 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல்பிரச்சாரம் முடிவடைந்ததன் காரணமாக, தொகுதிக்கு தொடர்பில்லாத நபர்கள், வெளியேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதனை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. ரவிக்குமார் கூறினார்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக நாளை மறுநாளும், வரும் 20 ஆம் தேதியும் தேர்தல் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை 23ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

இந்த தேர்தலோடு 11 மாநிலங்களுக்கு உட்பட்ட 33 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நடைபெறுகிறது.

இதற்கான பிரச்சாரமும் இன்று நிறைவடைந்தது.

ராஜஸ்தானில் 7 தொகுதிகளிலும், மேற்குவங்கத்தில் 6 தொகுதிகளிலும், அஸ்ஸாமில் 5 தொகுதிகளிலும், பீகாரில் 4 தொகுதிகளிலும், கர்நாடகாவில் 3 தொகுதிகளிலும், மத்தியப்பிரதேசம் மற்றும் சிக்கிமில் தலா இரண்டு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

கேரளா, சத்திஷ்கர், குஜராஜ், மேகாலயா ஆகிய மாநிலங்களில் தலா ஒரு சட்டப்பேரவை தொகுதியிலும் நாளை மறுநாள் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இதேபோல், கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரமும் இன்று நிறைவடைந்தது.

>>>><<<<

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிஜேபி வாக்குச்சாவடி முகவர்களிடையே காணொலி வாயிலாக அவர் இன்று உரையாற்றினார்.

ஜார்க்கண்ட் மாநிலம், வனம் மற்றும் தாதுவளத்தை கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், இதனை பயன்படுத்தி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளாமல் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான அரசு, மக்கள் நலனில் அக்கறையின்றி செயல்பட்டதாக குற்றம் சாட்டினார்.

>>>><<<<

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, பிஜேபிக்கு எதிராக தவறான கருத்துக்களை தெரிவிப்பதாக அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன் ராம் மெஹ்வால் தலைமையிலான பிஜேபி குழுவினர் இன்று புதுதில்லியில் தேர்தல் ஆணையத்திடம் புகார் மனு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால், இதுபோன்ற செயல்களில் திரு. ராகுல் காந்தி தொடர்ந்து ஈடுபடுவதாக கூறினார்.

இதனை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்ள வேண்டும் என்று தாங்கள் சமர்ப்பித்த புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால் தெரிவித்தார்.

>>>><<<<

ரஷ்யாவுடனான வர்த்தக உறவு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற இந்தியா – ரஷ்யா வர்த்தக அமைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் நிதிசார் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான சிக்கல்களை களைவதற்கு இருநாடுகளும் பணியாற்றி வருவதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

>>>><<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் மற்றும் மாணவர்கள் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று செகந்திராபாதில் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் மூன்று நாள் கலாச்சார விழாவினை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

வேற்றுமையில் ஒற்றுமையே நம் நாட்டின் வலிமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மூன்று நாள் விழாவில் ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

சத்திஷ்கர், ஒடிசா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் 726 கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையிலான உயர்நிலைக் குழு இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தீயணைப்புத் துறையை நவீனமயமாக்கும் பணிகளுக்காக இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக சத்திஷ்கர் மாநிலத்திற்கு 148 கோடி ரூபாயும், ஒடிசாவிற்கு 201 கோடி ரூபாயும், மேற்குவங்கத்திற்கு 377 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

மணிப்பூரில் மத்திய ரிசர்வ் காவல்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 11 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

Jiribam பகுதியில் பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் மத்திய ரிசர்வ் காவல்படையைச் சேர்ந்த ஒருவர் பலத்த காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

>>>><<<<

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஊரக வளர்ச்சித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பாண்டில் இந்த திட்டத்தின் கீழ் 6 ஆயிரத்து 350 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் 9 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் சாலை மற்றும் மேம்பாலப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு. ஒமர் அப்துல்லா, ஜம்முவில் உள்ள தலைமைச் செயலகத்திலிருந்து இன்று முதல் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

குளிர் காலத்தின் போது, ஜம்முவில் உள்ள தலைமைச் செயலகத்திலிருந்து அரசு நிர்வாகம் செயல்படும் வருடாந்தர நடைமுறைப்படி அவர் இப்பணிகளை தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை மேற்கொண்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>>><<<<

இமயமலை எழுத்தாளர்கள் மாநாடு லே-யில் இன்று நடைபெற்றது.

லடாக் யூனியன் பிரதேச செய்தி விளம்பரத்துறை சார்பில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் பிரபல எழுத்தாளர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

ஜெட் ஏர்வேஸ் நிறுவனர் திரு. நரேஷ் கோயலுக்கு மும்பை உயர்நீதிமன்றம் ஜாமின் வழங்கியுள்ளது.

சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் கைது செய்யப்பட்ட அவருக்கு மருத்துவ காரணங்களுக்காக ஜாமின் வழங்கப்படுவதாக உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

முன்னதாக, மருத்துவ காரணங்களுக்காக திரு. நரேஷ் கோயலுக்காக இடைக்கால ஜாமின் வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இலங்கையில் பொதுத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று நள்ளிரவு நிறைவடைகிறது.

வாக்குப்பதிவு வரும் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 4 மணி வரை நடைபெறுகிறது.

இதற்காக 13 ஆயிரத்து 400 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

>>>><<<<

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில், இந்தியா 4-0 என்ற கோல்கணக்கில் மலேசியாவை வென்றது.

பீகாரின் Rajgir–ல் நடைபெற்ற இப்போட்டியில் Sangita இரண்டு கோல் அடித்தார்.

Preeta மற்றும் Udita தலா ஒரு கோல் அடித்தனர்.

>>>><<<<

JVD ஓப்பன் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Jyothi Surekha Vennam வெண்கலப்பதக்கம் வென்றார்.

நெதர்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>><<<<

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Smit Ramesh Bhai Morabaya வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>><<<<

போலந்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Deepanshu பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் Stithapragnya Reddy காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகியதை அடுத்து Deepanshu வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

>>>><<<<

சென்னை மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் இந்தியாவின் Aravind Chidambaram பட்டம் வென்றார்.

>>>><<<<

Monte - Carlo ஸ்குவாஷ் போட்டி இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் Joshna Chinappa உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>END<<<<